தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் மாவட்ட பளு தூக்கும் விளையாட்டு சங்கம் நடத்தும் சப் ஜூனியர் ஜூனியர் சீனியர் ஆண்கள் பெண்கள்பளுதூக்கும் போட்டி ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.ஜெயசீலன் ஏற்பாட்டில் காக்கலூரில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் போட்டியை தொடங்கி வைத்து வீரர்களுக்கு கோப்பை வழங்கினார். இதில் கே.ஜெ.ரமேஷ், த.எத்திராஜ், மாஸ்டர் கருணாகரன், மதுரை வீரன், கே.கே.சொக்கலிங்கம், டி.தரணி, டி.கே.சீனிவாசன், டி.டி.தயாளன், எஸ்.சௌந்தரராஜன், வி.ஜெ.உமா மகேஸ்வரன், வி.தியாகராஜன், ஜெய்சங்கர், வழக்கறிஞர் தியாகு, ஆர்.பிரபு, ஸ்ரீதர், மதன், பார்த்திபன், விநாயகமூர்த்தி, சண்முகம், சுப்பிரமணி, மகேஷ், சரண்ராஜ், சூரி, திவாகர், சரண், கே.பழனி குழந்தைவேல், குமரவேல், முத்துவேல், சுமன், அமுத ராஜ், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவரின் கரங்களை வலுப்படுத்திட

தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் - அதிகாரப்பூர்வ BDAகள் பட்டியல்!

கழக தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் – அமைச்சர் – முனைவர் டி.ஆர்.பி. ராஜா அறிவிப்பு!

சென்னை, நவ.10-

இந்திய ஜனநாயகப் போராளி கழகத் தலைவர் அவர்களின் கரங்களை வலுப்படுத்திட தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் அதிகாரப்பூர்வ BDAகள் பட்டியல் வெளியிடப்படுகிறது என, தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் - அமைச்சர் - முனைவர் டி.ஆர்.பி. ராஜா அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு :-

அனைத்து மக்களின் வாக்குரிமையையும் பாரபட்சமின்றி பாதுகாத்து ஜனநாயகத்தை நிலைநாட்டும் பணியில் நம் தலைவர் அவர்கள் தலைமையிலான மக்கள் இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே முழுமையாக ஈடுபட்டு வரும் நிலையில், SIR உள்ளிட்ட தேர்தல் களப் பணிகளில் உதவுவதற்காக தகவல் தொழில்நுட்ப அணியின் அதிகாரப்பூர்வ BDA பட்டியல் தி.மு.க. இணையதளப் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. கழகத்தின் மாவட்ட-ஒன்றிய-நகர-பேரூக் கழகச் செயலாளர்கள் இந்த BDAக்களை, SIR குறித்து மக்களிடம் கழகம் மேற்கொள்ளும் விழிப்புணர்வு பணிகளிலும், படிவங்கள் நிரப்புவது, சரிபார்ப்பது உள்ளிட்ட அனைத்துப் பணிகளிலும் தவறாமல் பயன்படுத்திக் கொண்டு, இந்தியக் குடிமக்களின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கப் போராடும் ஒரே தலைவரான நம் திராவிட நாயகன் முதலமைச்சர் அவர்களின் கரங்களை வலுப்படுத்த வேண்டும் என கழக நிர்வாகிகள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்திய அளவில் ஒரு மாநிலத்தின் அனைத்து பாகங்களுக்கும் (பூத்) தனித் தனியே பாக டிஜிட்டல் ஏஜென்டுகள் பணியமர்த்திய ஒரே இயக்கம் நமது திராவிட நாயகன் அவர்களின் தலைமையில் இயங்கும் திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே என்பது நமது கழகத்திற்கு கிடைத்திருக்கும் மகத்தான தனிப்பெரும் பெருமையாகும். ஜனநாயகத்தின் முதல் பாதுகாவலர் நமது தலைவரே. அவரது கரங்களை வலுப்படுத்த நமது இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களோடு கைகோர்த்து திமுக தகவல் தொழில்நுட்ப அணியின் உடன்பிறப்புகள் முன்களவீரர்களாக அணிவகுத்து நிற்பார்கள். கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி பின்வரும் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

https://www.dmk.in/ta/resources/bda-list/

இவ்வாறு அவ்வறிவிப்பில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவித்துள்ளார்.

கும்மிடிப்பூண்டியில் மருத்துவ முகாம் தொடக்கம்!

திருவள்ளூர், நவ. 10–

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி பேரூராட்சியில் கலைமகள் உயர்நிலைபள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாமை துவக்கி வைத்து தூய்மை பணியாளர்கள் நலவாரிய கார்டு 25 நபர்களுக்கு, கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டசத்து பெட்டகம் 10 நபர்கள், காசநோய் ஊட்டசத்து பெட்டகம் 2 நபர்கள், தொழுநோயாளிக்கு மருத்து பெட்டகம் 1 நபருக்கு வழங்கி பல்வேறு மருத்துவ பாரிசோதனைகள் பார்வையிட்டு துறை அதிகாரிகளிடம் பயனாளிகளுக்கு மருத்துவ சேவை வழங்குமாறு தலைமை செயற்குழு உறுப்பினரும், கும்மி டிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வேண்டுகோள் விடுத்தார். இதில் மு.மணிபாலன், எஸ்.ரமேஷ், இரா.அறிவழகன், எம்.கேசவன், மு.பாஸ்கர், எஸ்.உதயகுமார், எஸ்.எம்.திருநாவுக்கரசு, கே.வி.நாகராஜ், டி.கே.ராஜா. அர்ஜீனன், பி.கே.நாரயணசாமி, பா.பரத்குமார், எம்.மெய்யழகன், ரெட்டம்பேடு செந்தில் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

‘வாட்ஸ் அப்’பில் வலம் வருகிறது!

வெற்றிகளால் அடக்கத்தையும் தோல்விகளால் ஊக்கத்தையும் பெறக்கூடியவர்களுக்கு வீழ்ச்சி என்பது எப்போதுமே இல்லை!

-முத்தமிழறிஞர் கலைஞர்

மதுரவாயல் வடக்குப் பகுதிக் கழக ஆலோசனைக் கூட்டம்!

பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் அறிவிப்பு!

சென்னை, நவ.10-

மதுரவாயல் வடக்குப் பகுதி செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் வழிகாட்டுதலின்படி நேற்று (10.11.2025 - திங்கள்கிழமை) காலை 10.00 மணி அளவில் பகுதி கழக அலுவலகத்தில் நொளம்பூரில் பகுதி கழக அவைத்தலைவர் ஆர். கர்ணல் தலைமையில், பகுதி கழக நிர்வாகிகள் ஆ.மாலினி, தீ.பாலாஜி, எம்.ஏ.செந்தில் சுரேஷ், ம.உதயகுமார் ஆகியோரின் முன்னிலையில் மதுரவாயல் வடக்கு பகுதி கழக ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மதுரவாயல் வடக்கு பகுதி கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 11.11.2025 தேதி நடைபெற உள்ள கண்டன ஆர்ப்பாட்டம் குறித்து, கழக ஆக்கப் பணிகள் குறித்து

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சிகளின் சார்பில்

S.I.R.-ஐ கண்டித்து செங்கல்பட்டில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர் என். சந்திரன் எம்.சி. வேண்டுகோள்!

சென்னை,நவ.10-

ஆலந்தூர் தெற்கு பகுதி கழகச் செயலாளர், 12-வது மண்டல குழு தலைவர் என். சந்திரன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் (S.I.R) சீராய்வை தேர்தல் ஆணையம் கைவிடக் கோரியும் ஒன்றிய பா.ஜ.க அரசின் கைப்பாவையாக மாறி எதேச்சதிகாரப் போக்குடன் தேர்தல் ணையம் தமிழ்நாட்டில் (S.J.R) செயல்படுத்துவதை கண்டித்தும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மதச் சார்பற்ற கூட்டணிக்கட்சிகளின் சார்பில் செங்கல்பட்டில் மாபெரும் கண்டன ஆர்ப்பட்டம் நாளை 11.11.2025 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு பழைய பேருந்து நிலையம் அருகில், செங்கல்பட்டில் நடைபெறுகிறது.

எனவே, ஆலந்தூர் தெற்கு பகுதிகுட்பட்ட பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள்,மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட நிர்வாகிகள், பகுதி-வட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி பிரதிநிதிகள், இளைஞரணியினர், மாணவரணியினர், மகளிரணியினர்,பாக முகவர்கள் (BLA-2), கழக தோழர்கள், கட்டாயம் இருவர்ண கழக கொடியுடன் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பான வரவேற்பு வழங்குமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு ஆலந்தூர் தெற்கு பகுதி கழகச் செயலாளர், 12-வது மண்டல குழு தலைவர் என். சந்திரன் தெரிவித்துள்ளார்.

என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி தமிழக முதல்வரின் ஆணையையேற்று சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி துறைமுகம் மேற்கு பகுதி 57 (அ) வட்டத்தில் பாகம் எண்.121 இல் இராமகிருஷ்ணன் தெருவில் SIR இன் வாக்காளர் கணக்கீட்டு படிவத்தை பாக நிலை அலுவலர் சரளா வாக்காளர்களிடம் பூர்த்தி செய்து தருமாறு வழங்கினார். உடன் தேர்தல் பார்வையாளர் இரா.நரேந்திரன், பகுதி செயலாளர் எஸ்.முரளி, வட்ட செயலாளர் பா.அண்ணாதுரை, மாவட்ட பிரதிநிதியும், பாக ஒருங்கிணைப்பாளருமான டி.எஸ்.சேகர், பாக முகவர் எஸ்.ராஜு, BDA கார்த்திக், வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எம்.உதயா, எஸ்.முருகன், BLC என்.கிஷோர் ஆகியோர் களப்பணியாற்றினர்.

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்கு பகுதி 177 (அ) வட்ட கழக செயலாளர் ஜி.பி.எஸ்.பாலசதிஷ் தலைமையில் BLO வுடன் இணைந்து பாக பொறுப்பாளர்கள் (BLA2) இணைந்து (SIR) சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் படிவங்களை வீடு வீடாக சென்று வாக்காளரிடம் வழங்கினார்கள். இதுகுறித்து கழக தேர்தல் பணிக்குழு செயலாளரும், வார்டு மாமன்ற உறுப்பினருமான வேளச்சேரி பெ.மணிமாறன் வாக்காளரிடம் எடுத்துரைத்து பணியினை ஆய்வு செய்தார். உடன் இளைஞரணி அணி பகுதி துணை அமைப்பாளர் அருண் நடராஜன் உள்ளிட்ட, வட்ட கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பங்கேற்றனர்.

பெண்களுக்கு புற்று நோய் பரிசோதனை : 38 மாவட்டங்களுக்கும் மருத்துவ வாகன சேவை!

ரூ.36 கோடி செலவில் - கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி!

14 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு விரைவில் செலுத்தப்படும்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை, நவ.10-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் தலைமையில் நேற்று (09.11.2025) சென்னை, அன்னை வேளாங்கன்னி கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின்கீழ், தென் சென்னை மாவட்டத்தில் தகுதி வாய்ந்த 125க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சார்ந்த 259 பெண் குழந்தைகளுக்கு தலா ரூ.25,000/ அரசு சேமிப்பு பத்திரங்கள் மற்றும் சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதியைச் சார்ந்த 118 இளம் பெண்களுக்கு அதிக பட்சமாக தலா ரூ.50,000/ வரையிலான காசோலைகளை வழங்கினார்.

பிறகு அமைச்சர் மா.சுப்பிரமணியம் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டு தலோடு, முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம் இன்றைக்கு மிக சிறப்பான வகையில் பயன்பெற்று வருகிறது. முதலமைச்சர் முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தை பெண் சிசுக்கொலையை தடுப்பது, குழந்தை திருமணத்தை தடுப்பது மற்றும் பெண் குழந்தைகளின் கல்வியை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின்படி பெண் கரு மற்றும் சிசு கொலைகளை தடுத்தல், குழந்தை திருமணங்களை தடுத்தல், நிதி பாதுகாப்பை மேம்படுத்துதல், பெண் கல்வியை மேம்படுத்துதல், ஆண் குழந்தைகளை மட்டுமே விரும்பும் மனப்போக்குகளை மாற்றுதல், சிறு குடும்ப முறையை ஊக்குவித்தல், குழந்தை பாலின விகிதத்தை உயர்த்துதல் போன்றவைகள் இந்த திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு முதலமைச்சர் இந்த திட்டத்தின் பலனை பொதுமக்களுக்கு மிகப் பெரிய அளவில் சென்றடைய வேண்டும் என்கின்ற வகையில் கடந்த 4 ஆண்டுகளாக இதற்கு முன்பு இந்த திட்டத்தில் பயன்பெறுபவர்களுக்கு ஆண்டு வருமானம் ரூ.72,000/ என்று இருந்ததை மாற்றி தற்போது ரூ.1,20,000/ என்று உயர்த்தி இருக்கிறார்கள். அதேபோல் கருத்தடை செய்பவர்களின் வயது 40 என்று இருந்ததை 49 வயது என்று உயர்த்தி இருக்கிறார்கள். இதன் மூலம் இந்த திட்டத்தில் ஏராளமான பேர் பயன்பெறுகிறார்கள்.

புற்றுநோய் தடுப்பூசி திட்டம்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, பெண் குழந்தைகளுக்கென்று பாதுகாப்பு திட்டங்கள் தொடர்ச்சியாக செய்யப்பட்டு வருகிறது. புதுமைப் பெண் திட்டம், விடியல் பயணம் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், காலை உணவுத் திட்டம் என்று திட்டங்களை சொல்லிக் கொண்டே போகலாம். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விரைவில் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் (Womens wellness) என்கின்ற வகையில் வாகனச் சேவை விரைவில் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்படவிருக்கிறது. மகளிர்கள் 100% அனைவரும் புற்றுநோய் பாதிப்பிலிருந்து பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளாக கருப்பைவாய் புற்றுநோய், மார்பக புற்றுநோய் என்று ஏறத்தாழ 8 வகையான புற்றுநோய் பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பதற்கு முழுமையான பரிசோதனைகள் செய்யக்கூடிய ஒரு திட்டம், வாகனங்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அனுப்பி முழு பரிசோதனை வசதிகளுடன் கூடிய அந்த வாகனம் விரைவில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் முதன் முறையாக அந்த திட்டம் இங்கு செயல்படுத்தப்படவிருக்கிறது. 38 மாவட்டங்களுக்கும் 38 வாகனங்கள் வடிவமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் 10 நாட்களில் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்படவிருக்கிறது. அதேபோல் முதலமைச்சர் பெண் குழந்தைகளைப் பாதுகாத்திடும் வகையில் 2025 26ஆம் நிதி ஆண்டில் ரூ.36 கோடி செலவில் 14 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு HPV (Human Papilloma Virus) வைரஸ் என்று சொல்லக்கூடிய கருப்பைவாய் புற்றுநோய் தடுப்பூசி பெண் குழந்தைகளுக்கு செலுத்த தொடங்கப்படவிருக்கிறது.

தனியார் மருத்துவமனைகளில் இந்த தடுப்பூசிகளுக்கு அதிகம் செலவு ஆகும். ஆனால் அரசு மருத்துவமனைகளில் இலவசமாக போடுவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இந்த திட்டம் விரைவில் தொடங்கப்படவிருக்கிறது. ஆக பெண்குழந்தைகளுக்கு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் தென்சென்னை மாவட்டத்தில் மட்டும் 118 பெண் குழந்தைகளுக்கு அதாவது 18 வயது நிரம்பிய பெண் குழந்தைகளுக்கு ரூ.50,000/ வரை ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

அதோடுமட்டுமல்லாமல் 259 குழந்தைகளை பயனாளிகளாக தேர்வு செய்து அவர்களுக்கு சேமிப்பு பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. ஆக 259 பெண் குழந்தைகளுக்கு சேமிப்பு பத்திரமும், 118 பேருக்கு முதிர்வுத்தொகை வழங்கும் நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது. அதோடுமட்டுமல்லாமல் குறைந்த வயதில் திருமணம் செய்துக் கொள்ளும் பெண் குழந்தைகளை பாதுகாப்பதற்குரிய உறுதிமொழியும் அதற்கு எதிராக கையெழுத்து பிரச்சாரமும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா, மண்டலக்குழுத் தலைவர் துரைராஜ், கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் மோகன்குமார் மற்றும் மாவட்ட சமூக நல அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

எழும்பூர் தெற்குப் பகுதி – வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எம்.ஆர்.விஜய் தந்தை

மாவட்டக் கழகப் பிரதிநிதி எம்.ரமேஷ் மறைவு!

கழக முன்னணியினர் அஞ்சலி!

சென்னை, நவ.10-

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்குப் பகுதி வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எம்.ஆர். விஜய் தந்தையும், 108 'அ' வட்டம் - மாவட்டப் பிரதிநிதியுமான எம்.ரமேஷ் (வயது 56) நேற்று (9.11.2025-ஞாயிறு) அதிகாலை 5.30 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது மறைவு செய்தி அறிந்து கழக முன்னணியினர், கழக நிர்வாகிகள் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் எண். 9/5, மங்காபுரம் 11வது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 31 எனும் முகவரியில் உள்ள அன்னாரது இல்லத்திலிருந்து இன்று (10.11.2025-திங்கள்) மதியம் 2 மணியளவில் புறப்பட்டு நுங்கம்பாக்கம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

எழும்பூர் தெற்குப் பகுதி வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எம்.ஆர்.விஜய் தந்தையும் சென்னை கிழக்கு மாவட்டப் பிரதிநிதியுமான எம்.ரமேஷ் என்கிற தாடி ரமேஷ் இயற்கை எய்தியதையடுத்து, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இதில் ஜெ.விஜயகுமார், ந.கலையரசன், ஆண்ட்ருஸ், ஜெ.சிலம்பரசன், பு.சதிஷ்குமார், சூர்யா, ஜெயகுமார், ஸ்ரீதர், ஜெயபிரகாஷ் மற்றும் விஜயதேவராஜ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.